www.Padasalai.Net www.CBSEtips.in

V9T

விருதுநகர் மாவட்டம்

முதல் இடைப் பருவத் தேர்வு - 2023

வகுப்பு 9

தமிழ்

கால அளவு: 1.30 மணிநேரம் மதிப்பெண்கள்: 50

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 8×1=8

1) தமிழ்விடு தூது எந்த வகை இலக்கியத்தைச் சேர்ந்தது.

அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை

இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல் திரட்டு

2) 'மிசை' என்பதன் எதிர்ச்சொல்

அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) ஆசை

3) நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?

அ) இலஞ்சி ஆ) அகழி இ) ஆறு ஈ) புலி

4) பொருத்தமான விடையைத் தேர்க

அ) நீரின்றி அமையாது உலகு - திருவள்ளுவர்

ஆ) நீரின்றி அமையாது யாக்கை - ஔவையார்

இ) மாமழை போற்றுதும் - இளங்கோவடிகள்

இ) அ, ஆ, இ ஆ) அ, ஆ இ) ஆ, இ ஈ) அ, இ

5) 'மல்லல் மூதூர் வயவேந்தே' - இத்தொடரில் 'மல்லல்' என்ற சொல்லின் பொருள் யாது?

அ) பெரிய ஆ) வளம் இ) மறுமை ஈ) பூவரசு மரம்

6) பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்?

அ) ஆறு ஆ) பத்து இ) ஏழு ஈ) இரண்டு

7) 'அழியா வனப்பு' இதில் 'அழியா' என்ற சொல்லுக்கான இலக்கண குறிப்பு ............

அ) வேற்றுமைத் தொகை ஆ) பண்புத் தொகை

இ) வினைத் தொகை ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

8) 'சனி நீராடு' என்பது யாருடைய வாக்கு?

அ) திருவள்ளுவர் ஆ) பேரா. தொ. பரமசிவன்

இ) ஔவையார் ஈ) ஜான் பென்னி குவிக்

**II. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை அளிக்க.** 3×2=6

9) நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?

10) 'கண்ணி' என்பதன் விளக்கம் யாது?

11) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' - குறிப்புத் தருக.

12) நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?

**III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** 2×2=4

13) **கலைச்சொல் தருக.**

அ) Water management ஆ) Phoneme -

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



V9T

14) அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி கோடிட்ட இடத்தை நிரப்புக.

அ) இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் ............ (திகழ்)

ஆ) தவறுகளைத் ............ (திருத்து)

15) சொல்லுக்குள் சொல் தேடுக.

அ) ஆற்றங்கரையோரம்

ஆ) பாய்மரக்கப்பல்

IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. 3×3=9

16) காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?

17) தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

18) பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

19) அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.

20) திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.

V. விடையளிக்க. 2×5=10

21) அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) அனைவரும் போற்றும் வகையில், வகுப்பறையில் உன் பொறுப்புகளாக (கடமைகளாக) ஐந்தினை எழுதுக.

22) அ) சுற்றுச் சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்துகொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

(அல்லது)

ஆ) உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின், 'கால்முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

VI. ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க. 1×8=8

23) திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

24) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக.

VII. அடிபிறழாமல் எழுதுக. 1×5=5

25) 'நீர்இன்று ............ 'எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com